பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

26 04 2026 SUNDAY 6 30 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்கள் தொகை கணக்கெடுப்பில் அனைவரும் பங்கேற்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. தமிழக சட்டப்பேரவை தேர்தல் நடவடிக்கைகளை பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் பார்வையிட்டதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

3. நாடுமுழுவதும் 3 கோடியே 50 லட்சம் குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளதாக உச்சநிதிமன்ற நீதிபதி திரு. எம். எம். சுந்தரேஷ் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த சில தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் Hemant Burman வெள்ளிப்பதக்கம் வென்றார்.

**>>>>><<<<**

மக்கள் தொகை கணக்கெடுப்பில் அனைவரும் பங்கேற்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

(சவுண்ட் பைட்ஸ்- மோடி-1- 90 செகன்ட்ஸ்)

தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

(சவுண்ட் பைட்ஸ்- மோடி-2 34 செகன்ட்ஸ்)

தொழில்நுட்ப பயன்பாடு நம் வாழ்க்கையின் ஒரு அங்கமாக உள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

தேசிய ஆவணக்காப்பகம் 20 கோடிக்கும் அதிகமான விலை மதிப்பற்ற ஆவணங்களை டிஜிட்டல் முறையில் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தியுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட்ஸ்- மோடி-3 - 75 செகன்ட்ஸ்)

கோடை விடுமுறை காலத்தை மாணவர்கள் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட்ஸ்- மோடி-4 - 29 செகன்ட்ஸ்)

பிரதமர் உரையின் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி இன்று இரவு 8 மணிக்கு மீண்டும் ஒலிபரப்பு செய்கிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>><<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தல் நடவடிக்கைகளை பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் பார்வையிட்டதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாக்குப்பதிவு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் இவர்கள் பார்வையிட்டதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வாக்குப்பதிவு சதவீதம் அதிகரித்துள்ளது குறித்து அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<

நாடுமுழுவதும் 3 கோடியே 50 லட்சம் குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளதாக உச்சநிதிமன்ற நீதிபதி திரு. எம். எம். சுந்தரேஷ் கூறியுள்ளார்.

சேலம், அஸ்தம்பட்டி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் புதிய கட்டிடங்களை திறந்து வைத்து அவர் பேசினார்.

வழக்குகள் தேக்கமடைவதை தடுக்க நீதிமன்றமும், வழக்கறிஞர்களும், அரசும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம் என்றும் திரு. சுந்தரேஷ் தெரிவித்தார்.

>>>>><<<<

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த சில தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் அதிகரிக்க கூடும் என்றும் வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதற்கிடையே, வேலூர் மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மோகன் 38 செகன்ட்ஸ்)

இந்நிலையில், கோடை விடுமுறை காரணமாக ஒகேனக்கலில் சுற்றுலாப் பயணிகள் குவிந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி 32 செகண்ட்ஸ்)

>>>>><<<<

மாவட்டச் செய்திகள்

மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில் சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான பட்டாபிஷேகம் இன்று இரவு நடைபெறுகிறது.

>>>>><<<<

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே பழைய இரும்புக் குடோனில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

>>>>><<<<

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டியில் நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

>>>>><<<<

தஞ்சாவூர் பெரிய கோவில் தேரோட்ட விழா நாளை நடைபெறுவதை ஒட்டி அம்மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் Hemant Burman வெள்ளிப்பதக்கம் வென்றார்.

எகிப்தின் Cairo-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 50 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 5 தங்கம், 6 வெள்ளி, 4 வெண்கலப்பதக்கங்களை வென்று, பதக்கப்பட்டியலில், முதலிடத்தில் உள்ளது.

>>>>><<<<

ஆசிய படகு சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

தென்கொரியாவின் Chungju-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவுகளில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

>>>>><<<<

ஆசிய பீச் விளையாட்டு போட்டிகளின் கபடி பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா, ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் 50-க்கு 27 என்ற புள்ளிக்கணக்கில் பாகிஸ்தானையும், மகளிர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் 50-க்கு 31 என்ற புள்ளிக்கணக்கில் பங்களாதேஷையும் வென்றது.

>>>>>END<<<<